சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

சிறப்பு அமர்வு வழக்கு எண் 220/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 18 (lw- 34) | நாள் | 18.06.2025 |
| பெயர் | செல்வக்குமார் | தொழில் | இளநிலை பொறியாளர் [illegible] மயிலாடுதுறை. |
| தந்தை பெயர் | சின்னத்தம்பி | வயது | 51 |
| கிராமம் | ஸ்ரீனிவாசபுரம் | தாலுக்கா | |

(1 முதல் 10 எதிரிகள் சிறையிலிருந்து ஆஜர் படுத்தப்பட்டனர். 11ம் எதிரி Split up in Spl.SC No. 26/2025. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மயிலாடுதுறை நகர மின்வாரியத்தில் இளநிலை பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.03.2024 அன்று மின்தடை எதுவும் ஏற்பட்டதா என்று மயிலாடுதுறை காவல் துணைக்கண்காணிப்பாளர் என்னை அலுவலகத்தில் வந்து விசாரித்து அந்த நாளில் மின்தடை எதுவும் ஏற்பட்டதா என்று சான்று கேட்டார் நான் அதற்காக 26.03.2024 அன்று ஒரு சான்றிதழ் கொடுத்தேன். அதில் 20.03.2024 அன்று 15.20 முதல் 15.25 மணி வரை உயர் மின்னழுத்த கோளாறு காரணமாக மயிலாடுதுறை நகர திருவழுந்தூர் மின்பாதையில் மின்தடை ஏற்பட்டதாக ஒரு சான்றிதழ் கொடுத்தேன். நான் கொடுத்த **சான்றிதழ் அசாஆ 17** ஆகும். இது சம்பந்தமாக என்னை மயிலாடுதுறை காவல் துணைக்கண்காணிப்பாளர் விசாரித்தார்.

**5 முதல் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கொடுத்த சான்றிதழ் எதனடிப்படையில் கொடுக்கப்பட்டது என்றால் துணைமின்நிலையத்தில் உள்ள Triping Register பதிவேட்டின் அடிப்படையில் கொடுத்தேன். அந்த Triping Register ஐ பராமரிக்கும் அதிகாரி நான்தான். அந்த Triping Register ன் நகலை நான் சான்றுடன் இணைக்கவில்லை என்றால் சரிதான். காவல் துணைக்கண்காணிப்பாளர் நேரில் வந்து கேட்டார். அந்த

குறிப்பிட்ட இடத்தில் எத்தனை மின்விளக்குகள் எரிய கூடிய நிலையில் இருந்த விவரம் எனக்கு தெரியாது நகராட்சிதான் அதை பராமரிக்கிறது. நான் கொடுத்த சான்றானது Triping Register அடிப்படையில் தரவில்லை என்றும் 20.03.2024 அன்று இரவு 8 மணிக்கு மேல் 10மணிக்குள் மயிலாடுதுறை நகராட்சி திருவழுதூர் பகுதி முழுவதும் மின்தடை இருந்தது என்றும் அதன் காரணமாகத்தான் Triping Register நகலை இணைக்காமல் காவல் துறை கேட்டுக்கொண்டதற்காக இயந்திரகதியில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிர்காலத்தில் இத்தகைய கேள்வி எழுப்பபட்டால் Triping Registerஐ அதற்கேற்றபடி தயார் செய்து கொள்ளலாம் என்பதற்காக அதை இணைக்கவில்லை என்றால் சரியல்ல.

**1 முதல் 4 எதிரிகள் மற்றும் 9,10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 4 எதிரிகள் மற்றும் 9, 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்கு வழக்கறிஞர் ஆஜராகவில்லை.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

18/10

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

சிறப்பு அமர்வு வழக்கு எண் 220/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 17 (lw- 31) | நாள் | 18.06.2025 |
| பெயர் | தினேஷ்குமார் | தொழில் | இரண்டாம் நிலைக்காவலர் |
| தந்தை பெயர் | தங்கையன் | வயது | 39 |
| கிராமம் | | தாலுக்கா | மயிலாடுதுறை |

(1 முதல் 10 எதிரிகள் சிறையிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டனர். 11ம் எதிரி Split up in Spl.SC No. 26/2025. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது இரண்டாம் நிலை காவலராக குத்தாலம் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2024ம் ஆண்டு குத்தாலம் காவல் நிலையத்தில் இருந்தபோது மயிலாடுதுறை பாராளுமன்ற தேர்தலுக்கான பறக்கும்படை பிரிவில் பணியில் இருந்தேன். கடந்த 20.03.2024 அன்று இரவு சுமார் 8 முதல் 9 மணிக்குள் மாப்படுகை வழியாக மயிலாடுதுறை வந்து கொண்டிருந்தபோது பெருமாள் கோவில் தெற்கு வீதியில், கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். அப்போது இரண்டு பேர் பைக்கில் வேகமாக போனார்கள். அங்கு எதாவது பணப்பட்டுவாடா செய்கிறார்களா என்று போய் பார்த்தேன். அப்போது ஐந்து இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் Start செய்து வேகமாக போய்விட்டார்கள். நான் அவர்களை பின்தொடர்ந்து டவேரா வாகனத்திலலேய திரும்ப சென்று பார்த்தபோது பெருமாய் கோவில் தெற்கு வீதியில், பனந்தோப்பு முனையில் ஒரு நபர் தலை சிதைந்த நிலையில் கிடந்தார். ஒரு நாய் குரைத்து கொண்டிருந்தது. ஒரு இருசக்கர வாகனம் அங்கு கிடந்தது. இது சம்பந்தமாக என்னை மயிலாடுதுறை காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

PC 719

**5 முதல் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையில் ஐந்து இருசக்கர வாகனத்தில் நபர்கள் Startசெய்து போனார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பனந்தோப்பு தெரு முனைக்கு சென்றபோது அங்கு ஒரு நபர் தலை சிதைந்த நிலையில் கிடந்தார் என்ற விவரத்தை நான் போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி இரண்டு விவரங்களையும் நான் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றாலும் அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மயிலாடுதுறை நகர காவல் ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் சடலம் கிடந்த இடத்திற்கு நான் இருக்கும்போதே வந்துவிட்டனர். நாங்கள் சடலத்தை பார்த்ததிலிருந்து 10 முதல் 15 நிமிடத்திற்குள் அந்த இடத்திற்கு வந்து விட்டார்கள். நான் சடலத்தை பார்த்தது முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ள 8 முதல் 9 மணிக்குள் என்றால் சரிதான்.

**1 முதல் 4 எதிரிகள் மற்றும் 9, 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 4 எதிரிகள் மற்றும் 9, 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்கு வழக்கறிஞர் ஆஜராகவில்லை.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

சாட்சிய வாக்குமூலம்
மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,
சிறப்பு அமர்வு வழக்கு எண் 220/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 19 (LW- 35) | நாள் | 18.06.2025 |
| பெயர் | சங்கர் | தொழில் | நகராட்சி ஆணையர் |
| தந்தை பெயர் | அண்ணாமலை | வயது | 43 |
| கிராமம் | திருவண்ணாமலை | தாலுக்கா | கொடைக்கானல் |

(1 முதல் 10 எதிரிகள் சிறையிலிருந்து ஆஜர் படுத்தப்பட்டனர். 11ம் எதிரி Split up in Spl.SC No. 26/2025. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது கொடைகானல் நகராட்சியில் சிறப்பு நிலை நகாரட்சியாளராக வேலை செய்து வருகிறேன். 2020 முதல் 2024 காலகட்டத்தில் மயிலாடுதுறை நகராட்சியில் ஆணையராக பணிபுரிந்தேன். கடந்த 20.03.2024 அன்று திருவழுந்தூர் பெருமாள் கோவில் தெற்கு வீதியில் தெருவிளக்குகள் எரிந்ததா என்று மயிலாடுதுறை காவல் துணைக்கண்காணிப்பாளர் கடிதம் மூலம் 23.03.2024 அன்று கேட்டார். அந்த **கடிதம் அசாஆ 18** ஆகும். அதன்பேரில் 27.03.2024 அன்று தனியார் ஒப்பந்ததாரர் MS sabari Electiricals Chennai என்பவரிடமிருந்து தெருவிளக்குகள் எரிந்தது குறித்து விவரம் கேட்கப்பட்டது. 20.03.2024 அன்று மாலை 6.15 மணியளவில் தெருவிளக்குகள் எரிய துவங்கி மறுநாள் காலை 5.50 மணிவரை எரிந்து நிறுத்தம் செய்ப்பட்டதாக தகவல் கொடுத்தார். அந்த விளக்கானது Automatic timer switch மூலம் இயக்கப்பட்டுள்ளது. தெருவிளக்கு எரிந்தது மற்றும் அணைந்தது குறித்து Online Statement சமர்பித்தார். மேலும் 14.05.2024 அன்று மயிலாடுதுறை காவல் துணைக்கண்காணிப்பாளர் என்னை நகராட்சி அலுவலகத்தில் வந்து என்னை விசாரித்தார். நான் **கொடுத்த சான்றிதழ் அசாஆ 19** ஆகும். இது சம்பந்தமாக என்னை காவல் துணைக்கண்காணிப்பாளர் விசாரித்தார்.

அ. சங்கர் 18/6/25

**5 முதல் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பெருமாள் கோவில் தெற்கு வீதியில் எத்தனை தெருவிளக்குகள் இருந்தன என்ற விவரம் எனக்கு தெரியாது. அதில் எத்தனை விளக்குள் எரியும் எத்தனை எரியாது என்பது எனக்கு தெரியாது என்றால் சாட்சி அனைத்தும் எரியும் நிலையில் இருந்தன என்கிறார். MS sabari Electiricals Chennai என்ற தனியார் நிறுவனம் தான் அந்த மின்விளக்குகளை பராமரித்தது என்ற விவரத்திற்கு ஒப்பந்தம் எதையும் துணைக்கண்காணிப்பாளர் என்னிடமிருந்து கைப்பற்றினாரா என்றால் இல்லை. எந்த விவரமும் தெரியாமல் அனைத்து தெருவிளக்குகளும் எரியும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. MS sabari Electiricals Chennai என்ற நிறுவனம் எந்த பராமரிப்பு பணியையும் அந்த காலத்தில் மேற்கொள்ளவில்லை என்றால் அது சரியல்ல. அதன் காரணமாகத்தான் சபரி எலக்ட்ரிக்கல் நிறுவனத்திலிருந்து ஆவணம் எதையும் பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 20.03.2024 அன்று நான் சொல்லியுள்ளது போல் அசாஆ 19ல் சொல்லியுள்ளதுபோல் பெருமாள் கோவில் தெற்கு வீதியில் எந்த தெருவிளக்கும் எரியும் நிலையில் இல்லை என்றால் சரியல்ல. வழக்கின் போக்கிற்கு ஏற்ப பிற்காலத்தில் மேற்கண்ட வகையில் எதிரி தரப்பில் வாதம் செய்தால் ஆவணங்களை ஏற்படுத்திக்கொள்ளலாம் என்ற எண்ணத்தில்தான் அவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**1 முதல் 4 எதிரிகள் மற்றும் 9, 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 4 எதிரிகள் மற்றும் 9, 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்கு வழக்கறிஞர் ஆஜராகவில்லை.

அ. அர்ஜுன் 18/6/25

...என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

சிறப்பு அமர்வு வழக்கு எண் 220/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 20 (LW- 36) | நாள் | 18.06.2025 |
| பெயர் | விஜயராணி | தொழில் | |
| தந்தை பெயர் | கலியபெருமாள் | வயது | 56 |
| கிராமம் | ஆக்கூர் | தாலுக்கா | |

(1 முதல் 10 எதிரிகள் சிறையிலிருந்து ஆஜர் படுத்தப்பட்டனர். 11ம் எதிரி Split up in Spl.SC No. 26/2025. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மயிலாடுதுறை வட்டாட்சியர் அலுவலகத்தில் கோட்ட கலால் அலுவலராக வேலை செய்து வருகிறேன். நான் 2024 ம் ஆண்டு மயிலாடுதுறை வட்ட அலுவலத்தில் வட்டாட்சியராக பணியாற்றி வந்தேன். அப்போது மயிலாடுதுறை காவல் நிலையத்தில் இருந்து கொலைசெய்யப்பட்ட அஜீத்குமார், பட்டமங்கலம், கலைஞர் காலனியை சேர்ந்தவர் அவருக்கும் அதே வழக்கில் காயம் பட்ட சரவணன் மற்றும் சத்யசீலன், த/பெ. சக்திவேல் என்பவருக்கும் சாதி சான்றிதழ் கேட்டு கடிதம் வந்ததது. நான் அந்த கடிதத்தை மயிலாடுதுறை சரக வருவாய் ஆய்வாளருக்கு Forward செய்தேன். அதை வருவாய் ஆய்வாளர் மயிலாடுதுறை பட்டமங்கலம் கிராம நிர்வாக அலவலருக்கு அனுப்பி வைத்து விசாரித்து அறிக்கை கோரப்பட்டது. அதனடிப்படையில் கிராம நிர்வாக அலுவலர் கையொப்பமிட்டு வருவாய் ஆய்வாளருக்கு அனுப்பி அவை வட்டாட்சியர் என்ற முறையில் எனக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதை நான் பார்வையிட்டு மேற்படி இருவரையும் விசாரித்து மேற்படி அஜீத்குமார், த/ப. லோகநாதன் மற்றும் சரவணன், த/பெ. சுப்ரமணியன், சத்யசீலன், த/பெ. சக்திவேல் ஆகிய மூவருக்கும் இந்து-ஆதிதிராவிடர் என்ற வகுப்பை சேர்ந்தவர்கள் என்று சாதி சான்றிதழை 21.03.2024 அன்று கையொப்பமிட்டு சான்று வழங்கினேன். அஜீத்குமார் என்பவருக்கு வழங்கிய **சாதி சான்றிதழ்**

18.06.2025.

**அசாஆ. 20** ஆகும். **சரவணன் என்பவருக்கு வழங்கிய சாதி சான்றிதழ் அசாஆ 21** ஆகும். **சத்யசீலனுக்கு வழங்கிய சாதி சான்றிதழ் 22** ஆகும். இது சம்பந்தமாக என்னை காவல் துணைக்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**5 முதல் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அசாஆ 20 மற்றும் 21 ஆகிய சான்றிதழ்களை வழங்க யார் யாரை விசாரித்து என்ன ஆவணங்கள் பார்யிடப்பட்டன என்ற குறிப்புகள் கோப்பில் உள்ளதா என்றால் இல்லை. அசாஆ 20 மற்றும் 21 குறித்து எனக்கு எந்த விவரமும் தெரியாமல் நான் வழங்கியுள்ள சான்றுகள் தவறானவை என்றால் அது சரியல்ல. அஜீத்குமார் மற்றும் சரவணன் ஆகியோர் இந்து ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர்கள் இல்லை என்றும் போலிசார் கேட்டுகொண்டதற்கிணங்க இயந்திரகதியில் சாதி சான்றிதழ் வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

**1 முதல் 4 எதிரிகள் மற்றும் 9, 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 4 எதிரிகள் மற்றும் 9, 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்கு வழக்கறிஞர் ஆஜராகவில்லை.

18.06.2025

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

18/6/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

## சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

சிறப்பு அமர்வு வழக்கு எண் 220/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 21 (LW- 37) | நாள் | 18.06.2025 |
| பெயர் | ராஜீ | தொழில் | : துணை வட்டாட்சியர் - |
| தந்தை பெயர் | ராமசாமி | வயது | 47 |
| கிராமம் | மயிலாடுதுறை | தாலுக்கா | மயிலாடுதுறை |

(1 முதல் 10 எதிரிகள் சிறையிலிருந்து ஆஜர் படுத்தப்பட்டனர். 11ம் எதிரி Split up in Spl.SC No. 26/2025. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரகத்தில் துணை வட்டாட்சியர் நில ஆர்ஜிதம் ஆக பணியாற்று வருகிறேன். கடந்த 2024 ம் ஆண்டு மயிலாடுதுறை வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக மயிலாடுதுறை காவல் நிலையத்தில் இருந்து வழக்கு தொடர்புடைய நபர்களின் சாதி சான்றிதழ் கேட்டு கடிதம் வந்தது. அந்த கடிதத்தினை மயிலாடுதுறை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சரக வருவாய் அலுவலருக்கு forward செய்தேன். விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்ய கோரியதன் அடிப்படையில் மேற்படி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சரக வருவாய் அலுவலர் கொடுத்த விசாரணை அறிக்கையின் அடிப்படையில் சந்திரமோகன், த/பெ. ரவி, என்பவர் இந்து - வன்னியர் என்று சான்றிதழ் வழங்கியுள்ளேன். அது **அசாஆ 23** ஆகும். பாலாஜி, த/பெ. சேட்டு என்பவர் இந்து- நாடார் என்று சான்றுவழங்கினேன். அது **அசாஆ 24** ஆகும். சதீஷ், த/பெ. சேகர் இந்து வன்னியர் என்று சான்று வழங்கினேன். அது **அசாஆ 25** ஆகும். ஸ்ரீராம், த/பெ. மனோகரன், இந்து-வன்னியர், அது

**அசாஆ 26** ஆகும். சந்திரமௌலி, த/பெ. சுரேஷ், இந்து–பிராமினர் அது **அசாஆ 27** ஆகும். மோகன்தாஸ், த/பெ. குணசேகர், இந்து–வன்னியர் என்று சான்று வழங்கினேன். அது **அசாஆ 28** ஆகும். சத்தியநாதன், த/பெ. ரவிசந்திரன், இந்து–வன்னியர் என்று சான்று வழங்கினேன். அது **அசாஆ 29** ஆகும். நாகராஜ், த/பெ. புஷ்பராஜ், இந்து –படையாட்சி என்று சான்று வழங்கினேன். அது **அசாஆ 30** ஆகும். அஜித்குமார், த/பெ. செந்தில்குமார், இந்து – அகமுடையார் என்று சான்று வழங்கினேன். அது **அசாஆ 31** ஆகும். இது சம்பந்தமாக 14.05.2024 அன்று காவல் துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**5 முதல் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை இல்லை.

**1 முதல் 4 எதிரிகள் மற்றும் 9,10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 4 எதிரிகள் மற்றும் 9,10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்கு வழக்கறிஞர் ஆஜராகவில்லை.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

18/6/24

மாவட்ட நீதிபதி

மயிலாடுதுறை